Date: 06/09/22
Time: 10.58 AM

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல். 08 SEP 2022

வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை–5.

ந.க.ஆ.கு.3/3064257/2022,

நாள்.30.08.2022.

## சுற்றறிக்கை

பொருள்: கருணை அடிப்படையில் பணிநியமனம் – கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற காலஞ்சென்ற அரசு ஊழியரை முன்னிலைப்படுத்தி வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்று – வறிய நிலைச் சான்று குறித்த சுற்றறிக்கை – தொடர்பாக.

பார்வை:–
1. அரசுக் கடித எண்(நிலை) எண்.3 மற்றும் 4/க்யூ–1/2010 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.11.01.2010.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.23.01.2020.
3. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண்.W.P.No.22328/2015--இன் தீர்ப்புரை நாள்.17.08.2022.

28544

*********

28544
08/09/22

பார்வை–1இல் அரசுக் கடிதங்களில் கருணை அடிப்படையில் பணிநியமனங்கள் தொடர்பாக, அரசு ஊழியர் பணியிடையே இறந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு பணியிடை இறந்த அரசு ஊழியரை முன்னிலைப்படுத்தி வருவாய் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட வேண்டிய வருமானச் சான்று வறிய நிலைச் சான்று மற்றும் பிற சான்றுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒருங்கிணைந்த சான்றாக அரசு ஊழியர் பணியிடையே இறந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு பணியிடை இறந்த அரசு ஊழியரை முன்னிலைப்படுத்தி வழங்கப்பட வேண்டும். மேலும், பணிநியமனத்திற்கு முன்னதாகவே வருவாய் வட்டாட்சியரின் ஒருங்கிணைந்த சான்று பெற்று ஆய்வு செய்த பின்னரே கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2) இந்நிலையில், பார்வை–3இல் காணும் தீர்ப்புரையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற வழங்கப்படும் ஒருங்கிணைந்த சான்று வழங்கும் நடைமுறையில் குடும்ப வறிய நிலை குறித்து சுற்றறிக்கை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

3) இப்பொருள் தொடர்பாக, அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.23.01.2020–இல், பக்க எண்–7இல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கருணை அடிப்படையிலான தகுதி அடைய, குடும்பமானது வறுமையான சூழ்நிலையில் இருக்க வேண்டும்.**

i. இறந்து போன அரசு ஊழியர் குடும்பத்தின் நிதி நிலைமையை பணிநியமனம் செய்யும் அதிகாரிகள் ஆய்வு செய்து, அவர்கள் வேலைவாய்ப்பில்லாமல் பொருளாதார சூழலை எதிர்கொள்ள இயலாது என்று திருப்தியடைந்த பின்னரே

அந்த குடும்பத்தில் உள்ள தகுதியான நபருக்கு வேலையை அளிக்க வேண்டும். ஆனால், வேலைவாய்ப்பிற்காக அக்குடும்பம் இடர்பாடுகளை சந்திக்க கூடாது.

ii. ஆண்டு வருமானம் 2 லட்சம் ரூபாய்க்கு குறைவாக உள்ள குடும்பத்தினர் மட்டுமே ஏழ்மையான சூழ்நிலையில் உள்ளதாகக் கருதப்பட வேண்டும்.

iii. இறந்த ஊழியரின் குடும்ப ஓய்வூதியம் மற்றும் ஊழியர் வசிக்கும் வீடு போன்ற அசையா சொத்துக்கள் போன்றவற்றை குடும்ப வருமானத்தை மதிப்பிடும் போது கணக்கில் எடுத்துக்கொள்ள தேவையில்லை. இருப்பினும், அரசு ஊழியரின் குடும்ப உறுப்பினர்களில் பெயர்களில் உள்ள அசையும் / அசையா சொத்துக்களிலிருந்து வருமானம் பெறப்படுமாயின், அவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அப்பகுதி வரம்பிற்குட்பட்ட வட்டாட்சியரால் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

iv. வேறு மாநிலத்தை சேர்ந்த ஆனால் தமிழ்நாடு அரசுப் பணியில் பணிபுரிந்த இறந்த அரசு ஊழியர் தொடர்பான நேர்வில், தமிழ்நாட்டில் அவர் வசிக்கும் பகுதியில் உள்ள வட்டாட்சியரிடமிருந்தும், அவரது பூர்வீக மாநிலத்தில் உள்ள வருவாய் கோட்டாட்சியர் அல்லது துணை ஆட்சியாளரிடமிருந்தும் தேவையான சான்றிதழ் பெறப்பட வேண்டும்.

4) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்படும் பணிக்கு நிகரான ஒரு பணியிடம் கருணை அடிப்படையில் நிரப்படுவதால், அப்பணியிடம் உண்மையில் வறிய நிலையில் உள்ள காலஞ்சென்ற அரசு ஊழியரின் குடும்பம் இடர்பாடுகளை சந்திக்க கூடாது என்ற நோக்கத்திற்காகவே அவரது வாரிசுதாரருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட வேண்டும்.

5) எனவே, மேற்படி பார்வை-3இல் காணும் தீர்ப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, பார்வை-2இல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, காலஞ்சென்ற அரசு ஊழியரின் குடும்பத்தின் வறிய சூழ்நிலையை கருத்தில் கொண்டு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குவது தொடர்பாக, விசாரணையில் குடும்ப வறிய நிலை குறித்து ஆய்வு செய்து, ஒருங்கிணைந்த சான்றுகளை காலதாமதமின்றி விரைவில் வழங்க வட்டாட்சியர்களை அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்/-எஸ்.கே. பிரபாகர்,
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையர்.

பெறுநர்
மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

B. Kalay 30/8/2022

உதவி ஆணையர்-4,
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையருக்காக.

30/8/22